சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் – புதிய கலைச் சொற்கள் உருவாக்கம் இணைய வழியில் அறிமுகம் செய்ய 2021–2022–ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,08,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் – 2022–2023–ஆம் நிதியாண்டு முதல் தொடர் செலவினமாக ரூ.5,00,000/– நிதி ஒதுக்கீடு செய்ய நிர்வாக அனுமதி அளித்தும் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.143

நாள் 03.11.2021
பிலவ, ஐப்பசி – 17
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:–

1. 2021–2022–ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை அறிவிப்பு.
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்.1473/2021, நாள் 15.9.2021.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.8151/ வ.செ.3/2021, நாள். 16.09.2021.

========

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 31.8.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

> "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ் புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை இணைய வழியில் அறிமுகம் செய்து மொழியியல் அறிஞர்கள், துறைசார் வல்லுநர்கள், தமிழ் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் அடங்கிய தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுக் கலைச் சொற்கள் தரப்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் செயல்பட்டுவரும் தமிழ்க் கலைக்கழகத்தின் வாயிலாக அலுவல்சார், அலுவல்சாரா, மதிப்புறு உறுப்பினர்களைக் கொண்டு திங்களுக்கு இரு கூட்டங்கள் நடத்தி, பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்க்

கலைச்சொற்களை வடிவமைத்து வருவதாகவும், இறுதியாக்கம் செய்யப்பெறும் தமிழ்க்கலைச் சொற்கள் அரசாணை வாயிலாக வெளியிடப்பட்டும், அவ்வியக்ககத்தின் சொற்குவை வலைத்தளம் (sorkuvai.com), முகநூல் (facebook), கட்செவி (whatsapp), சுட்டுரை (twitter), படவரி (instagram), நாளிதழ், மாத இதழ்கள் வாயிலாகப் பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கும் வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரையில் ஏற்பளிக்கப்பட்ட சொற்கள் 30,700 என்றும், அரசாணை பெறப்பட்ட சொற்கள் 22,700 என்றும், அரசின் பரிசீலனையில் உள்ள சொற்கள் 6000 என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின்கீழ் செயல்பட்டுவரும் தமிழ்க் கலைக்கழகச் செயல்பாட்டின் நீட்சியாக காலத்திற்கேற்ற புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை இணையவழியில் அறிமுகம் செய்யும் வகையில், மொழியியல் அறிஞர்கள், பலதுறைசார் வல்லுநர்கள், தமிழ் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் என கலைச்சொல் சார்ந்த துறைகளுக்கேற்ப, வெவ்வேறு நபர்கள் தனிக்குழுவாகக்கூடி திங்கள்தோறும் இணையவழியில் கூட்டம் நடத்தி, துறைசார்ந்த புதிய கலைச்சொற்கள் தரப்படுத்தப்படுவதாகவும், அக்கூட்டத்தில் உள்நாட்டு, அயல்நாட்டு துறைசார் வல்லுநர்களும் பங்கேற்பதாகவும், தனிக்குழுவில் இடம் பெறும் 5 வல்லுநர்களுக்கு கூட்டமொன்றுக்கு ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வீதம் மதிப்பூதியம் வழங்கப்பெறலாம் என்றும், இணைய வழியில் புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை அறிமுகம் செய்வதற்கும், தரவேற்றம் செய்வதற்கும் கீழ்க்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப்பெறலாம் என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் கோரியுள்ளதாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | செலவின விவரம் | தொடரும் செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | வல்லுநருக்கான மதிப்பூதியம் (ரூ.1000 x 5 வல்லுநர்கள் x 12 மாதம்) | 60,000/- |
| 2. | இணையதளம் பதிவு (ஓர் ஆண்டுக்கு) | 1500/- |
| 3. | சேவையகம் (4ஜிபி ராம்) (ஓர் ஆண்டுக்கு) | 28,500/- |
| 4. | புதிய சொற்களை மீணிகழ்வகற்றம் செய்தல் | 30,000/- |
| 5. | தரவு மேலாண்மை | 30,000/- |
| 6. | மின் நூல்கள் வெளியிடுதல் | 48,000/- |
| 7. | கூடுதல் நிரலாக்கம் | 1,32,000/- |
| 8. | இடைமுகம் வடிவமைப்பு | 1,08,000/- |
| 9. | தரவுக் காப்பாக்கம் | 10,000/- |
| | கூடுதல் | 4,48,000/- |
| | சேவை வரி 18% | 80,640/- |
| | மொத்தம் | 5,28,640/- (அ) 5,30,000/- |

(ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)

4. மேற்கூறியவாறு இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.5,30,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அகரமுதலித் திட்ட இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளதுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயற்படுத்தும் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அரசு நிலையில் கருதிப்பார்த்து அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொகை ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.:–

i). இத்திட்டத்திற்காக பெறப்படும் தொகை உரிய திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ii). இத்தொகைக்கான பயனீட்டுச் சான்று, செலவின விவரங்களுடன் அரசுக்கு அனுப்பும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிட வேண்டும்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்று புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை இணையவழியில் அறிமுகம் செய்வது தொடர்பாக, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

i). செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம், அவ்வியக்ககத்தில் செயல்பட்டுவரும் தமிழ்க் கலைக்கழகச் செயல்பாட்டின் நீட்சியாக புதிய கலைச்சொல் சார்ந்த துறைகளுக்கேற்ப, வெவ்வேறு நபர்கள் கொண்ட தனிக் குழு அமைத்து, இணைய வழியில் புதிய கலைச்சொற்கள் உருவாக்கத்தை அறிமுகம் செய்வதற்கும், தரவேற்றம் செய்வதற்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. இது குறித்து தமிழ்நாடு மின்னாளுமை முகமையை அணுகிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது;

ii). இப்பணிகளை மேற்கொள்ள நடப்பு நிதியாண்டின் (2021–2022) மீதமுள்ள ஐந்து மாதங்களுக்கு ரூ.2,08,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

iii). 2022–2023–ஆம் நிதியாண்டு முதல் மேலே பத்தி 3, அட்டவணையில் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள தொடர் செலவினமாக ரூ.5,00,000/–க்கு மட்டும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய நிருவாக அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – **AB.** தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் – 333. தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 09. ஏனையத் தொகை கொடுத்தல்."
IFHRMS (த.தொ.கு.2202 05 001 **AB** 33309)

7. மேலே பத்தி 5(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ. 2,08,000/– 2021–2022–ம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5(ii)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 5(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இத்திட்டத்திற்காக பெறப்படும் தொகை உரிய திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும், இத்தொகைக்கான பயனீட்டுச் சான்று மற்றும் செலவின விவரங்களுடன் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென செந்தமிழ் சொற்பிறப்பியல் அரமுதலித் திட்ட இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.47564/ நிதி (தவ(ம)செ) / 2021, நாள் 01.11.2021–ன் வாயிலாக பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.740 (எழுநூற்று நாற்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ),
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை–28.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
நிதி (தவ(ம)செ/வ.செ.பொ.II /வ.வ.I)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

3/11/21